# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>குருதேவ் ரவீந்திரநாத் தாகூரின் 164வது பிறந்தநாள் நினைவுதினம்</u>**
**<u>சிந்தனை மற்றும் கலைகள் மூலமான சமர்ப்பணத்துடன் அனுஷ்டிப்பு</u>**

கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் (SVCC), நோபல் வெற்றியாளர், கவிஞர், தத்துவஞானி மற்றும் தொலைநோக்கு சிந்தனையாளர் என்ற பன்முக ஆளுமையாளரான குருதேவ் ரவீந்திரநாத் தாகூரின் 164வது பிறந்தநாளை 2025 மே 8 ஆம் திகதி அன்று புலமை மற்றும் கலை வடிவங்களிலான சமர்ப்பணங்களுடன் அனுஷ்டித்திருந்தது.

2. ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரசித்திபெற்ற புலமையாளரும் கலாசார பேச்சாளருமான பேராசிரியர் பிரணீத் அபயசுந்தர அவர்களின் உரையுடன் இந்நிகழ்வுகள் ஆரம்பமாகியது, அவர் தாகூரின் நீடித்த பொருத்தப்பாடு, அவரது மனிதநேய இலட்சியங்கள் மற்றும் அவரது படைப்புகளது பார்வையின் உலகளாவிய தன்மை ஆகியவற்றைப் பிரதிபலித்தார். தாகூரின் தத்துவத்திற்கும் பிராந்தியத்தின் பகிரப்பட்ட கலாசார பாரம்பரியத்திற்கும் இடையிலான தொடர்புகளை குறிப்பிட்ட இந்த உரை கவிஞரின் எல்லைகள் கடந்த மரபு பற்றிய ஆழமான நுண்ணறிவை வழங்கியது.

3. உள்ளூர் மற்றும் இந்திய கலைஞர்கள் தாகூரின் இசையமைப்புகளைக் கொண்ட ஆத்மார்த்தமான இசை மற்றும் நடனங்களும் இங்கு இடம்பெற்றிருந்தன. சாஸ்திரபதி அசித் அத்தபத்து, சாஸ்திரபதி பலிந்த உடவேலராச்சி, திருமதி ஜெயந்தி ரே ஆகியோரது ரவீந்திர சங்கீத் மற்றும் கலாசார நிலைய மாணவர்கள் வழங்கிய தாகூரின் கலைத்திறனைக் குறிக்கும் பாடல்களின் சங்கமம், அழகு மற்றும் ஆன்மீக ஆழத்தின் இணைவை குறிக்கும் வகையில் அமைந்திருந்தது. அத்துடன் ஹங்கேரிய கலைஞர் விராக் ரேகா துரி அவர்கள் இந்த நிகழ்வில் ஒரு வசீகரிக்கும் ஒடிசி வகை நடன நிகழ்வினால் பார்வையாளர்களை மயக்கினார்.

4. அறிஞர்கள், மாணவர்கள், கலைஞர்கள் மற்றும் இந்திய - இலங்கை மக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். தலைமுறை தலைமுறையாக ஊக்கமளிக்கும் ஓர் இலக்கியவாதிக்கு அஞ்சலி செலுத்தவே இவ்வாறு அனைத்து தரப்பினரும் கூடியிருந்தனர். அத்துடன் இலங்கை தாகூர் சங்கத்துடன் இணைந்து குருதேவ் தாகூரின் நினைவாக கலாசார நிலையம் நடத்திய இந்நிகழ்ச்சி, பகிரப்பட்ட கலை மற்றும் அறிவுசார் நோக்கங்கள்

மூலம் கலாசாரங்களுக்கு இடையேயான உரையாடல்களை மீண்டும் உறுதிப்படுத்தியது.

***********

**கொழும்பு**
**09 மே 2025**